**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.163/2010</u>**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோக்குமார் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 23.02.2023

**P.W. : 1**

**<u>2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் முசிறியில் குடியிருக்கும் சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் தனிப்பட்ட முறையில் ஏதேனும் சொத்து வாங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் பெயரில் என் பாட்டி எழுதி வைத்த சொத்து தான் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எனது பாட்டி எந்த வருடம் வாங்கினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் 1973ல் வாங்கப்பட்டதாகும். அந்த சொத்துக்களை இந்த பாகபிரிவினை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். துறையூரில் உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் என் அம்மா பெயரில் உள்ளது. அந்த சொத்து 1978ல் வாங்கப்பட்ட சொத்து ஆகும். அந்த சொத்தை என் தாத்தா வாங்கி கொடுத்ததா அல்லது என்

அப்பா வாங்கி கொடுத்ததா என்றால் என் அம்மாவின் அப்பா வாங்கி கொடுத்த சொத்தாகும். என் அம்மாவின் தகப்பனாரின் அந்த சொத்தை வாங்கி கொடுத்ததற்கான ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா அரசு போக்குவரத்து கழகத்தில் எப்போது பணியில் சேர்ந்து எப்போது ஓய்வு பெற்றார் என்றால் 1985 – 2008ல் பணி ஓய்வு பெற்றார். என் அப்பா அரசு போக்குவரத்து கழகத்தில் கூட்டு குடும்பம் என்று சொல்லி என் பெரியப்பா மற்றும் எனது தாத்தா பெயரை கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பாவின் வருமான வரி கணக்கிலாவது என் பெரியப்பா மற்றும் என் தாத்தாவின் பெயரை சேர்த்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு பாக பிரிவினை வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு செய்தேனா என்றால் அனுப்பியுள்ளோம். எனக்கும் எனது தகப்பனாருக்கும் இடையே எவ்வளவு வருடம் பகை என்றால் பகை இல்லை. என் தகப்பனார் இந்த வழக்கில் பாகம் கோரி தான் கட்சி செய்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் அப்பா (8ம் பிரதிவாதி ) என்னிடம் வந்து இந்த சொத்தில் எனக்கு பங்கில்லை என்று தெரிவித்தாரா என்றால் இல்லை. என் தகப்பனார் வாங்கிய ஆரம்ப காலத்தில் இருந்து எவ்வளவு சம்பளம் பெற்றார் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆரம்பக்காலத்தில் என் அப்பாவிற்கு சம்பளம் கையில் கொடுத்தார்கள் பின்னிட்டு துறையூரில் உள்ள கனரா வங்கியில் செலுத்தினார்கள். அந்த சம்பளத்தை கொண்டு தான் குடும்பத்தை நடத்தினார் என்றால் சரிதான். விவசாய வருமானமும் வந்தது. 1978ம் வருடம் பிதுராஜ்ஜித கூட்டு குடும்ப சொத்தினை விற்கும் பொழுது எனது தாத்தா ராமசாமி கவுண்டர், எனது பெரியப்பா சீரங்க கவுண்டர் மற்றும் எனது

தகப்பனார் குமரசாமி கவுண்டர் மற்றும் எனது தாத்தாவுடன் பிறந்த நல்லம்மாள் ஆகியோர்கள் அனைவரும் அவரவர் பாகத்தை இரண்டு பத்திரமாக கிரையம் செய்துவிட்டார்கள். அந்த கிரையம் செல்லாது என்று அதில் பாக பணம் வரவில்லை என்று சொல்லி எனது பெரியப்பா, எனது அப்பாவோ, நல்லம்மாளோ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 1978 ம் வருடம் வள்ளிபுரத்தில் விற்கப்பட்ட கிரைய சொத்தில் நல்லம்மாளுக்குண்டான பாக பணம் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் ஒருபோதும் தனக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தில் இருந்து பாக பணம் வரவில்லை என்று என் தாத்தாவிடம் கேட்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர் சொத்துக்கள் பொறுத்து ஆவணம் ஏற்பட்ட பின்பு எத்தனை வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1995 ம் வருடம் பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டது. வழக்கு தொடர்ந்தது 2010 ம் வருடமாகும். மேற்படி ராமசாமி கவுண்டர் கிரையம் கொடுத்த சொத்துக்களுக்குண்டான வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சீரங்க கவுண்டர் மகன்களுக்கு தாத்தா ராமசாமி கவுண்டர் தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்த சொத்துக்கள் என்ன சொத்துக்கள் என்றால் அது விவசாய சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்களின் பட்டா தானசெட்டில்மெண்ட்டிற்கு பின்னிட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தானசெட்டில்மெண்ட் செய்யப்பட்ட சொத்துக்களை கிரையம் வாங்கியவர்கள் சுவாதீனம் எடுத்துக் கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கள் கிரையம் பெற்றவர்களிடம்

உள்ளதா அல்லது அவர்கள் விற்றுவிட்டார்களா என்றால் மறு கிரையம் செய்துவிட்டார்கள். அவ்வாறு மறுகிரையம் பெற்ற நபர்களையும் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த வருடம் ஈரோட்டிற்கு வேலைக்கு சென்றேன் என்றால் 2009 ல் வேலைக்கு சென்றேன். என் தாத்தா ராமசாமி கவுண்டர் இறக்கும் வரை கன்ட்ராக்டராக இருந்தாரா என்றால் இறப்பதற்கு முன்பே விட்டு விட்டார். எந்த வருடம் என்றால் 1985 க்கு முன்பே விட்டு விட்டார்.